செ.வெ.எண்: 45 நாள்:22.04.2025

**சிவகங்கை மாவட்டம்**

**வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ், ஜே.சி.பி இயந்திரங்களை இயக்குவதற்கு தகுதியுடைய திறன்பெற்ற விருப்பமுள்ள ஓட்டுநர்கள், சிவகங்கை மற்றும் காரைக்குடியிலுள்ள வேளாண் பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் அலுவகத்தினை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

*****

வேளாண்மை பொறியியல் துறையின் மூலம், வாய்கால் தூர்வாருதல் மற்றும் பல்வேறு வேளாண் பணிகளுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால், இ–வாடகை செயலியின் மூலம் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.

தற்பொழுது, வேளாண்மை பணிகளில் ஜே.சி.பி–க்களின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதால், சிவகங்கை மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை வசம் உள்ள 22–ஜே.சி.பி–க்களை இயக்குவதற்கு திறன் பெற்ற வெளிமுகமை ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர்.

ஓட்டுநர் பணிக்கு 8–ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் நடைமுறையிலுள்ள கனரக வாகன ஓட்டுநர் உரிமம், நல்ல உடல் தகுதி சான்று மற்றும் ஆதார் நகல் ஆகியவைகளை பெற்றிருத்தல் வேண்டும். எனவே, ஜே.சி.பி–க்களை இயக்குவதற்கு தகுதியுடைய திறன்பெற்ற விருப்பமுள்ள ஓட்டுநர்கள், வெளிமுகமை வாயிலாக பணிபுரிய சிவகங்கை தொண்டி ரோட்டில் அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ), சிவகங்கை அலுவலகத்தினை நேரிலோ அல்லது 9080230845 என்ற அலைபேசி எண்ணிலோ மற்றும்

உதவி செயற்பொறியாளர் (வே.பொ), காரைக்குடி அலுவலகத்தினை நேரிலோ அல்லது 9442225856 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை.**

@ Svg PRO @SivagangaiDist @PROSIVAGANGAI